கூட்டங்களுக்குப் போகவேண்டியதில்லை. ஆனால், எதுவாயிருந்தாலும், எவர் ஒருவருடைய மனம் புண்படுகிறது என்றாலும், அதற்குக் காரணமாக இருப்பவர்கள் மீது, சட்டம் இடம் கொடுத்தால், சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கு இந்த அரசாங்கம் எப்போதும் தயங்குகிறதில்லை.

திரு. ர. ஜீவரத்னம்: கனம் சபாநாயகர் அவர்களே, எங்கள் ஊரில் ஒரு பாலத்தின் மீது, "பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் பார்ப்பானைக் கொல்" என்று எழுதி, கீழே "தி.மு.க." என்று கையொப்பம் இடப்பட்டிருக்கிறது. அதை அழிக்கச் சர்க்கார் உத்தரவு இடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அம்மாதிரி எழுத்துக்கள் ஒரு பாலத்திலே எழுதப்பட்டிருந்தால், அந்த எழுத்துக்களை யார் எழுதியிருந்தாலும், அதை அரசாங்கம் தான் துடைக்கவேண்டும் என்றால் அந்த வட்டாரத்திலுள்ளவர்களுடைய மனத்திலே ரோஷம் இல்லையா, நியாய உணர்வு கிடையாதா என்று கேட்கிறேன். யார் வேண்டுமானாலும், அதை அழித்துவிட்டிருக்கலாம். அழிக்காதது குற்றம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், அதற்காக கனம் உறுப்பினர், அரசாங்கம் இதில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது.

மதிய உணவு

*5. கேள்வி—**திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதிய உணவுத் திட்டத்தின்கீழ், உணவு உட்கொண்ட மாணவர்களுள், கடந்த 1965-ம் ஆண்டில் மட்டும் எத்தனை இடங்களில், எத்தனை மாணவர்கள் சொறி, சிரங்கு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டனர்?

(இ) இவைகள்பற்றித் தடுப்பு முறையாக அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) ஒருவரும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: இன்றையதினம் வந்திருக்கிற ஒரு செய்தியில் அரசாங்கத்தின் சார்பாக பெரியநாயகம் பாளையத்தில் உள்ள பள்ளிக்கூடக் குழந்தைகளின் தேக ஆரோக்கியத்தைப் பற்றி எடுத்த ஆராய்ச்சி சர்வேயில் ஏறக்குறைய 50 சத விகிதத்திற்கு மேல் ஏராளமான குழந்தைகள் நோய்நொடிகளுக்கு ஆளாகியிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது இந்த மதிய உணவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளவர்கள் எத்தனை பேர் என்று கணக்குக் கொடுக்க முடியுமா?

1st August 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வி சொறி சிரங் கைப் பற்றியது. அதுபற்றிப் பதில் சொல்லும்போது அப்படி ஒன்றும் இல்லை என்று சொன்னேன். மதிய உணவு சுத்தமான முறையில் அளிக்கப்படுவதோடு கூட புஷ்டியானதாகவும் அளிக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்பட்டுதான் வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய சர்க்காரின் சார்பிலேயே ஹெல்த் சர்வே எடுக்கப்பட்டது. அதில் தான் டெபிஷியன்சி, சொறி சிரங்கு, போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் 50 சதவிகிதத்திற்கு மேல் என்று தெரியவந்திருக்கிறது. ஆகவே மதிய உணவினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பது பற்றி கணக்கு எடுக்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மதிய உணவினாலே சொறி, சிரங்கு ஏற்பட்டதான தகவல் அரசாங்கத்தினிடம் இல்லை.

Somasundaram Mills, Coimbatore

* 6. *Q.*—SRI M. KALYANASUNDARAM :
SRI A. K. SUBBIAH : } Will the Hon. the Chief Minister be pleased to state the details of steps taken by the Government to lift the lock-out declared by the management of Somasundaram Mills, Coimbatore, from 4th March 1966?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கோயம்புத்தூர் தொழிலாளர் துறை துணைக் கமிஷனர், ஆலை நிர்வாகத்தினருடனும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தினார். அதனால் இரு தரப்பினரும் ஓர் உடன்பாட்டிற்கு வந்தனர். 16—3—1966 தேதியன்று வேலையைத் தொடங்க இருதரப்பினரும் ஒப்புக் கொண்டனர். அதன்படி, நிர்வாகத்தினர் கதவடைப்பை நிறுத்தி, 15/16—3—1966 தேதி இரவு 1 மணியிலிருந்து ஆலையை மீண்டும் திறந்தனர். 16—3—1966 தேதியன்று மூன்றுவது ஷிப்டி லிருந்து ஆலையில் இயல்பாக வேலை தொடங்கியது.

திரு. ஆ. கு. சுப்பையா : கோவை மாவட்டத்தில் தற்சமயம் எத்தனை ஆலைகளில் கதவடைப்பு செய்யப்பட்டிருக்கிறது ? அவை களைத் திறப்பதற்கு எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலளிக்கும்போது முடி வாகச் சொல்கிறேன் (சிரிப்பு).

அரிசன மாணவ விடுதிகளில் சரும நோய்கள்

* 7. **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1965-ம் ஆண்டில் எத்தனை ஆதித் திராவிட மாணவர் விடுதிகளில், சொறி, சிரங்கு போன்ற நோய்கள் உண்டாயின ?